**O.S.91/2017, 18.08.2021, 03.35 pm - 03.50 pm**

**வா.சா.2, செல்வம், த/பெ.தங்கவேல்**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

நான் கூலி வேலை செய்கிறேன். யார் நிலத்தில் கூலி வேலை செய்கிறேன் என்றால் சண்முகம், பழனி நிலத்தில் வேலை செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் ஒப்பந்தம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது, அந்த ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. எந்த இடத்தில் வைத்து ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் ஞாபகமில்லை. எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. எந்த சர்வே எண் சம்மந்தமாக ஒப்பந்தம் போடப்பட்டது என்று எனக்கு ஞாபகமில்லை என்றால் சரிதான். எவ்வளவு விஸ்தீரணம் தொடர்பாக ஒப்பந்தம் போடப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஒப்பந்தம் பற்றி எனக்கு எதுவும் ஞாபகமில்லை என்றால் சரிதான். ஒப்பந்தம் போட்ட விவரம் எனக்கு ஞாபகமில்லை என்ற விவரத்தை பிரமாண வாக்குமூலம் தயார் செய்த என்னுடைய வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் இல்லை. யார் யாரிடம் ஒப்பந்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல, லோகலெட்சுமியிடம், லட்சுமிகாந்தன் போட்டார். லோகலெட்சுமி எவ்வளவு நாட்களாக மனநிலை சரியில்லாமல் இருக்கிறார் என்றால் சுமார் 4 அல்லது 5 வருடம் இருக்கும். லோகலெட்சுமிக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. லோகலெட்சுமி மகள் ரூபினி என்பது தெரியுமா என்றால் தெரியும். கருணாகரன் லோகலெட்சுமியின் கணவர் என்று சொன்னால் சரிதான். லோகலெட்சுமி, கருணாகரன் தான் ரூபினியை வளர்த்து திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால், நான் அப்பொழுது அந்த ஊரில் இல்லை. ரூபினி, சிவசங்கரன் திருமணத்திற்கு நான் சென்றேனா என்றால் செல்லவில்லை. திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதை பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன், அந்த பத்திரத்தை நான் பார்த்தேனா என்றால் கேள்விபட்டேன். திருப்பத்தூர் சார்பதிவாளர் அலுவலத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட விவரத்தை யார் என்னிடம் கூறினார்கள் என்றால் ஊரில் பேசியதன்படி கேள்விபட்டேன். பிரமாண வாக்குமூலம் தயார் செய்யும்பொழுது ஊரில் பேசியதன்படி கேள்விபட்டேன் என்பதை என்னுடைய வழக்கறிஞரிடம் கூறினேனா என்றால் கூறினேன். நான் படிக்கவில்லை, பிரமாண வாக்குமூலத்தை வழக்கறிஞர் படித்து சொன்னார் நான் கையொப்பம் செய்தேன். அவ்வாறு பிரமாண வாக்குமூலத்தை படிக்க கேட்டு கையொப்பம் செய்தேன் என்று குறிப்பு இல்லை, எனவே, பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரச்சனையின்போது கேள்விபட்டேன் என்று கூறினீர்கள் அது எப்பொழுது ஏற்பட்டது என்றால் சுமார் 4 அல்லது 5 மாதம் முன்பு இருக்கும். அந்த பிரச்சனையின்போது யார் யார் இருந்தார்கள் என்றால் லட்சுமிகாந்தன், நான் மற்றும் ஊரை சேரந்த்த 4, 5 நபர்கள் அவர்கள் பெயர்கள் தெரியாது. பிரச்சனையொட்டி காவல்நிலையத்திற்கு சென்றோமா என்றால் இல்லை. லட்சுமிகாந்தன் இந்த வழக்கு சொத்து சம்மந்தமாக எத்தனை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு யாரும் படித்து காண்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மிஷன்தோப்பு என்ற

பெரியதோப்பு திருப்பத்தூரை சேர்நத்த ஒருவர் பெயரில் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்தது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது என்று எவ்வாறு தெரியும் என்றால் கேள்விபட்டேன். பிரச்சனை நடந்த தேதி தெரியுமா என்றால் சுமார் 4, 5 வருடம் முன்பிருக்கும். வாதி அழைத்ததன்பேரில் தான் சாட்சியம் சொல்ல வந்தேனா என்றால் லட்சுமிகாந்தன் நடந்ததை கூறும்படி சொன்னார், சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனக்கு இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை:-</u>** இல்லை.